# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2023 சனவரி

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**கண்ணோட்டம்:**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கிய 3 பகுதிகளை கொண்டுள்ளது.

1. **பகுதி A 20 புள்ளிகளைக்** கொண்ட நான்கு (1-4) கட்டாய வினாக்களைக் கொண்டது.
2. **பகுதி B 30 புள்ளிகளைக்** கொண்ட மூன்று (5-7) கட்டாய வினாக்களைக் கொண்டது
3. **பகுதி C 50 புள்ளிகளைக்** கொண்ட மூன்று (8-10) கட்டாய வினாக்களைக் கொண்டது

## பகுதி A

**வினா. 01**

இவ்வினா பின்வரும் கணிப்பீடுகளை சோதித்துள்ளது,

**(a)** மாதாந்த சமநிலைப் புள்ளி அலகுகள்

**(b)** முதலாவது மாதத்தில் 450 போத்தல்கள் விற்பனை செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பின், இலக்கு வைக்கப்பட்ட இலாபம்.

**செயற்திறன்:**

இவ்வினாவிற்கான ஒட்டுமொத்த செயல்திறன் திருப்திகரமாக உள்ளது. இருப்பினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவின் **பகுதி (a)** இற்கு முழுப்புள்ளிகளையும் பெறவில்லை.

**பகுதி (a) இல் குறைந்த செயல்திறனுக்கான பிரதான காரணங்கள்.**

(1) பரீட்சார்த்திகளால் மொத்த நிலையான கிரயம் ரூ. 160,000 (ரூ..95,000/- + ரூ.65,000/-) இனை சரியாக கணிப்பிட முடியவில்லை. சில பரீட்சார்த்திகள் குறித்த நிலையான கிரயம் ரூ.95,000 இனை மொத்த நிலையான கிரயமாக எடுத்திருக்கும் போது வேறு சில பரீட்சார்த்திகள் பொதுவான நிலையான கிரயம் ரூ. 650,000 மற்றும் ரூ.95,000 இனை நிலையான கிரயமாக எடுத்ததால் தவறான சமநிலைப்புள்ளிகளை கணிப்பிட்டுள்ளனர்.

(2) பரீட்சார்த்திகள் பொதுவான நிலையான மேந்தலைகளில் 10% ரூ. 65,000 (Rs.650,000/- * 10%) இனை குறித்த நிலையான மேந்தலை ரூ. 95,000 உடன் எடுக்க தவறியுள்ளனர்.

(3) சில பரீட்சார்த்திகள் நேரப் பொருள் மற்றும் நேரககூலி என்பவற்றை தவிர்த்து மாறும் மேந்தலைகளை மட்டும் எல்லைக்கிரயமாக கருதியுள்ளனர்.

இருப்பினும், **பகுதி (b)** இல் ரூ. 95,000 மற்றும் ரூ. 65,000 இனை இலாபக்கணிப்பீட்டில் நிலையான மேந்தலைகளாக எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் இலாபம் மற்றும் பங்களிப்பு எனும் பதங்களில் குழப்பமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே, பரீட்சார்த்திகள் இலாபம் மற்றும் பங்களிப்பிற்கிடையிலான வேறுபாட்டை இனங்கண்டு சரியான இடத்தில் பயன்படுத்த தெரிய வேண்டும்.

**பரீட்சகரின் பரிந்துரை:**

(1) பரீட்சார்த்திகள் ஒத்தவகையான வினாக்களை பயற்சி பெற வேண்டும்.

(2) பாடப்புத்தகத்திலுள்ள தொடர்புடைய அலகினை ஒழுங்காக வாசிக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

**வினா. 02**

2022 ஆம் ஆண்டிற்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை (நாட்களில்) கணிக்குமாறு இவ்வினாவில் சோதிக்கப்பட்டுள்ளது.

**செயற்திறன்**

திருப்பதிகரமாகவுள்ளது.

**குறைந்த செயல்திறனுக்கான காரணங்கள்:**

தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை கணிக்கையில் பரீட்சார்த்திகள் சரியான சமன்பாட்டை பயன்படுத்தியுள்ளனர். அதற்கமைய சரக்கிருப்புக் காலம், கடன்கொடுத்தோர் செலுத்துகைக் காலம் சரியாக கணிப்பிட்டுள்ளனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் விற்பனை மீதான வருமதி திரும்பல் காலத்திலிருந்து கடன்பட்டோர் சேகரிப்புக் காலத்தை கணிப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

**பரீட்சார்திகளால் விடப்பட்ட ஏனைய பொதுவான தவறுகள் பின்வருமாறு :**

(1) சரக்கிருப்புக்காலம் மற்றும் சென்மதியாளர் கொடுப்பனவுக்காலம் என்பவற்றுக்கான கொடுப்பனவுக்காலம் என்பவற்றுக்கான சமன்பாட்டை சரியாக எழுதியிருந்த போதிலும் சராசரி சென்மதியாளர் அல்லது சராசரி இருப்பினை எடுக்க 2 ஆல் பிரிக்க மறந்துவிட்டனர்

(2) விற்பனை மீது 28 வீத மொத்த இலாபத்தை பிரயோகித்து விற்பனைக்கிரயத்தை அடைந்த பின்னர் கொள்வனவினை கண்டுபிடிக்க இயலவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரை:**

(1) பரீட்சார்த்திகள் ஒத்தவகையான வினாக்களை பயற்சி பெற்று தொழிற்படு மூலதன சுற்றினது கருத்தினை மற்றும் கணிக்கும் சமன்பாட்டை விளங்கிக்கொள்ள முடியும்.

(2) பாடப்புத்தகத்திலுள்ள தொடர்புடைய அலகினை ஒழுங்காக வாசிக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

**வினா. 03**

இவ்வினா பின்வருவனவற்றை தயாரிப்பது மீதான அறிவினை சோதித்துள்ளது.

(a) 2023 இற்கான விற்பனைப் பாதீடு – அலகுகளிலும் பெறுமதியிலும்.

(b) 2023 இற்கான உற்பத்திப் பாதீடு – அலகுகளில்.

**செயற்திறன்**

திருப்பதிகரமாக இல்லை.

**இருப்பினும், பின்வரும் விடயங்கள் குறிப்பிடத்தக்கது:**

ஒரு சில மாணவர்கள் மட்டுமே சிறப்பாக விடையளித்துள்ளனர். இது ஏனைய மாணவரகள் வினாவினை சரியாக விளங்கிக் கொள்ளாததை கருதுகின்றது. இருப்பினும் பின்வரும் விடயங்கள் குறிப்பிடத்தக்கது:

(1) பெரும்பாலும் அனைத்து பரீட்சார்த்திகளும் சரியான கழிவு விலை ரூ. 440 இனை அடைந்துள்ளனர். (ரூ. 500/- -500*12%).

(2) உற்பத்தி பாதீட்டு தயாரிப்பில் ஆரம்ப மீதி ரூ. 150,000 சரியாக இனங்காணப்பட்டுள்ளது.

**பரீட்சார்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு :**

(1) டொப் கம்பனியின் மொத்த சந்த அளவு மற்றும் சந்தைப்பங்குகளை இனங்காணவில்லை.

(2) சந்தை அளவு அதிகரித்த பின்னரான புதிய 60மூ சந்தைப்பங்கினை இனங்காணவில்லை

**பரீட்சகரின் பரிந்துரை:**

(1) மொத்த சந்தை அளவு மற்றும் கம்பனியின் சந்தைப் பங்குகளின் கருத்தினை விளங்கிக்கொள்ளல்

(2) தரப்பட்ட சந்தைப்பங்கிலிருந்து மொத்த சந்தை அளவினைக் கணிப்பிட உறுதியாகவிருத்தல்

(3) வினாவின் ஒவ்வொரு வசனத்தையும் கவனமாக வாசித்தல்.

**வினா. 04**

இவ்வினா கம்பனியானது அச்சை உள்ளக ரீதியாக உருவாக்க வேண்டுமா, இல்லையா என்பது பற்றிய குறுங்கால தீர்மானமெடுத்தல் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவை சோதிக்கின்றது.

**செயற்திறன்**

திருப்பதிகரமாகவுள்ளது.

**இருப்பினும், பின்வரும் விடயங்கள் குறிப்பிடத்தக்கது:**

(1) ரூ. 130,000 பெறுமதியான பொருட்கள் மூழ்கிய செலவாக சரியாக கருதப்பட்டிருந்ததுடன் அச்சினை உற்பத்தி செய்வதற்கு தொடர்புடைய செலவாக கருதப்படவில்லை.

(2) தொடர்புடைய செலவுகளின் கீழ் மாறும் உற்பத்தி மேந்தலை மற்றும் விசேட ஊழிய கிரயம் என்பன சரியாக இனங்காணப்பட்டுள்ளன.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு :**

(1) பயன்படுத்தாத பெருட்களின் வருமானம் ரூ. 45,000 இனை சந்தர்ப்பச்செலவாக கருத்தில் எடுக்காது விட்டுவிடல்.

(2) ஏனைய உற்பத்தி நடவடிக்கையில் அமர்த்தப்பட்ட ஊழியர்களில் மேலதிக வேலைநேரக் கொடுப்பனவை ஊழியக் கிரயமாக இனங்காணவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரை:**

- ஒத்தவகையான கடந்தகால வினாக்களை பயிற்சி செய்தல்.

## <u>பிரிவு B</u>

**வினா. 05**

இவ்வினா பினவருவனவற்றின் மீதான அறிவினை சோதித்துள்ளது.

**(a)** வரையறைக் காரணிகளை இனங்காணல்.

**(b)** இனங்காணப்பட்ட வரையறைக் காரணி / காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையை கணிப்பிடுதல்.

**செயற்திறன்**

நன்று.

**இருப்பினும், பின்வரும் விடயங்கள் குறிப்பிடத்தக்கது:**

(1) பாதிடப்பட்ட விற்பனை அகுகளை அடைவதற்கு தேவையான மொத்த வழங்களை தரப்பட்ட மூன்று வழங்களுடன் ஒப்பிடுவதன் மூலம் சரியாக வரையறைக் காரணியை இனங்கண்டு அவர்களது திறன்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

(2) இருப்பினும், சரியாக மிகை ∴ குறை வளங்களை இனங்கண்ட சில பரீட்சார்த்திகள் இறுதி முடிவினை எதிர் விதமாக எழுதியுள்ளனர். உதாரணமாக சரியான மிகை நேர் மூலப்பொருட்கள் குறை மூலப்பொருளாக பெயரிடப்பட்டுள்ளதால் அம்முடிவுக்கான புள்ளிகளை இழந்துள்ளனர்.

(3) ஆனைத்து பரீட்சார்த்திகளும் ஒவ்வொரு உற்பத்தியினதும் பங்களிப்பினை சரியாக கணிப்பிட்டுள்ளனர். ஆனால் வரையறைக் காரணிக்கான பங்களிப்பினை கண்டறியும் போது, சில பரீட்சார்த்திகள் ஒரு அலகுக்கு தேவையான வளங்களை சரியாக இனங்காணாமல் தவறிழைத்துள்ளனர். இருப்பினும், கணிப்பிடப்பட்ட வரையறைக்காரணிக்கான பங்களிப்பின் படி சரியாக நிலைப்படுத்தியுள்ளனர்.

**பரீட்சகரின் பரிந்துரை:**

- கடந்தகால வினாத்தாள்களை பயிற்சி செய்தல்.

**வினா. 06**

காசுப் பாதீட்டை எவ்வாறு தயாரிப்பது என இவ்வினா சோதித்துள்ளது.

**செயற்திறன்**

நன்று.

**குறைந்த செயல்திறனுக்கான காரணங்கள்:**

(1) சில பரீட்சார்திகள் 30 நாள் மற்றும் 60 நாள் கடனுக்கான காசுப் பெறுவனவுகளை சரியாக இனங்காணவில்லை.

(2) பெரும்பாலான பரீட்சாரத்திகள் வட்டி வருமானத்தை சரியாக இனங்காண தவறியுள்ளனர்.

(3) சில பரீட்சார்த்திகள் காசுப்பாதீட்டை மாதாந்த அடிப்படையில் முன்னிலைப்படுத்தவில்லை மற்றும் வினாவில் மதாந்த பாதீட்டை தயாரிக்குமாறு கேட்கப்பட்ட போதிலும் காலாண்டு பாதீட்டினை காட்டியுள்ளனர்.

(4) சில பரீட்சார்த்திகள் தேறிய காசுப்பாய்ச்சலை முன்னிலைப்படுத்தாததுடன் காசு இறுதி மீதிகளை சரியாக காட்டவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரை:**

கடந்தகால வினாத்தாள்களை பயிற்சி செய்க – ஒத்தவகையான வினாக்கள் திரும்பத் திரும்ப ஒவ்வொரு பரீட்சையிலும் சோதிக்கப்பட்டதால் கடந்தகால வினாத்தாள்களை பயிற்சி செய்க.

**வினா. 07**

இவ்வினாவானது சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம், நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC) என்பவற்றின் கணிப்பீட்டினை சோதித்துள்ளது.

**செயற்திறன்**

திருப்பதிகரமாகவுள்ளது.

**குறைந்த செயல்திறனுக்கான காரணங்கள்:**

(1) **பகுதி A** மற்றும் **B** இற்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். அவர்கள் **பகுதி C** மற்றும் **D** இல் தவறிழைத்துள்ளனர்.

(2) பங்குகளின் கிரயம் பற்றி பல மாணவர்கள் சரியாக அறிந்திருக்கவில்லை. அவர்கள் தங்களது விடையினை வீதத்திற்கு பதிலாக ரூபாக்களில் வழங்கியுள்ளனர்

(3) வருடம் 1 தொடக்கம் 5 வரையான வட்டி வீதத்தை கணிப்பிடுகையில் பெரும்பாலானவர்கள் தவறிழைத்துள்ளனர்.

(4) தனிச்சங்களின் கிரயத்தை கணிப்பிடும் போது சில பரீட்சார்த்திகள் வரியினை கருத்திற்கொள்ளவில்லை.

(5) WACC கணிப்பீட்டில் பங்குகள் மற்றும் தனிச்சங்களின் சந்தைப்பெறுமதியினை கணிப்பிடுகையில் சில மாணவர்கள் தவறிழைத்துள்ளனர்.

**பரீட்சகரின் பரிந்துரை:**

- கடந்தகால வினாத்தாள்களை பயிற்சி செய்க – ஒத்தவகையான வினாக்கள் திரும்பத் திரும்ப ஒவ்வொரு பரீட்சையிலும் சோதிக்கப்பட்டதால் கடந்தகால வினாத்தாள்களை பயிற்சி செய்க.
- சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம், நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC) என்பவற்றின் சமன்பாடுகளை கற்றல்.

## <u>பிரிவு C</u>

**வினா. 08**

இவ்வினாவானது வேறுபட்ட வகையான முரண்கள் மற்றும் தொழிற்பாட்டு கூற்றினை தயாரிப்பதற்கான இயலுமையை சோதித்துள்ளது.

**செயற்திறன்**

திருப்பதிகரமாக இல்லை.

**குறைந்த செயல்திறனுக்கான காரணங்கள்:**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் முரண்களை சரியாக கணிப்பிட்டிருக்கவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அடிப்படை முரண்களை கணிப்பதற்கான அறிவினைக் கொண்டிருக்கவில்லை.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் முரண்களை கணிப்பதற்கான சமன்பாடு பற்றிய அறிவினை கொண்டிருக்கவில்லை.

(3) சமன்பாடு சரியாக தெரிந்திருந்த சில பரீட்சார்த்திகள் சமன்பாட்டில் தரவுகளை சரியாக பிரயோகித்திருக்கவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் கணிக்கப்பட்ட முரண்களை சாதகமானவை அல்லது பாதகமானவை எனக் குறிப்பிட்டிருக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் பாதகமான முரண்களை சாதகமாகவும் சாதகமான முரண்களை பாதகமாகவும் தவறாக இனங்கண்டுள்ளனர்.

(6) வினாவின் **பகுதி B** இற்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் முயற்சித்துள்ளனர். சில பரீட்சார்த்திகள் தவறுதலாக கூற்றினை சீராக்கம் செய்துள்ளனர். (ாதகமான முரண்களை சாதகமாகவும் சாதகமான முரண்களை பாதகமாகவும்)

**பரீட்சகரின் பரிந்துரை:**

- கடந்தகால வினாத்தாள்களை பயிற்சி செய்க. எப்போதும் செயன்முறைகளை காட்டுக.
- பாடப்புத்தகத்தை பின்பற்றி நடைமுறையில் பிரயோகப்படுத்துக.
- வேறுபட்ட சூழ்நிலைகளில் முரண்களின் சமன்பாடுகளை பயிற்சிசெய்ய வேண்டும்.
- முரண் பகுப்பாய்வில் சரியான பிரயோகத்துடன் சமன்பாடுகளை முன்னிலைப்படுத்தல்.

**வினா. 09**

இவ்வினா நிகர இற்றைப் பெறுமதியில் செயற்றிட்ட மதிப்பீட்டின் பிரயோகம் மீதான அறிவினை சோதித்துள்ளது.

**செயற்திறன்**

திருப்பதிகரமாக இல்லை.

**குறைந்த செயல்திறனுக்கான காரணங்கள்:**

(1) சில பரீட்சார்த்திகள் மொத்த இலாபத்திற்கு பதிலாக வருமான தொகையினை காசு உட்பாய்ச்சலாக எடுத்துள்ளனர். 5ம் வருடத்தில் தொழிற்படு மூலதன திரும்பலை கருத்தில் கொள்ளவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் 4மூ தரகு கொடுப்பனவை மட்டும் காசு உட்பாய்ச்சலாக கருதியுள்ளனர்.

(3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வரியினை தவறாக கணிப்பிட்டுள்ளனர். சிலர் வரியினைக் கணிப்பிடும் போது மூலதனக் கொடுப்பனவை கருத்தில் கொள்ளவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் பெறுமானத் தேய்வினை காசு வெளிப்பாய்ச்சலாக கருதியுள்ளனர்.

(5) வரியினைக் கணிப்பிடும் போது, பல பரீட்சார்த்திகள் 5 வருடத்தில் தளபாட அகற்றல் பெறுமதியினை கருத்தில்கொள்ளவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரை:**

(1) பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தின் உதாரணங்கள் மற்றும் கடந்தகால வினாக்களை பயிற்சி செய்ய வேண்டும்.

(2) கணிப்பீட்டு தவறுகளை குறைக்க வேண்டும்

(3) பரீட்சார்த்திகள் அனைத்து செய்முறைகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

(4) நிகர இற்றைப்பெறுமதியின் பரிந்துரைகளை தெளிவாக காரணங்களுடன் குறிப்பிட வேண்டும்.

**வினா. 10**

- இவ்வினாவின் **பகுதி A** ஆனது செயன்முறைக் கிரயத்தின் அறிவினை சோதித்துள்ளது. சமான அலகுகள் மற்றும் செயற்பாட்டு கிரய கூற்றை தயாரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

- இவ்வினாவின் **பகுதி B** ஆனது நிலையற்ற தன்மை மற்றும் தீர்மானமெடுத்தலில் ஒவ்வொரு தெரிவினதும் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதிகளைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

**செயற்திறன்**

திருப்பதிகரமாகவுள்ளது.

**குறைந்த செயல்திறனுக்கான காரணங்கள்:**

**பகுதி (A):**

(1) சில பரீட்சார்த்திகள் அசாதாரண இலாபத்தை கணிக்கும் போது ஆரம்ப அலகுகளின் எண்ணிக்கையை கருத்தில்கொள்ளவில்லை.

(2) மேலும், சமப்பாட்டு கிரயத்தை கணிக்கும் போது ஆரம்ப குறைவேலைப் பெறுமதியை எடுக்கவில்லை.

(3) சில பரீட்சார்த்திகள் சமப்பாட்டு அலகுகளை கணிக்கும் போது சாதாரண நட்டத்தை கருத்தில்கொண்டுள்ளனர்.

(4) சில பரீட்சார்த்திகள் அலகுக்கான கிரயத்தை கணிக்கும் போது நேரடி மூலப்பொருள் கிரயத்திலிருந்து சாதாரண நட்டத்தின் விற்பனைப் பெறுமதியை கழிப்பதை கருத்தில் எடுக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் சமப்பாட்டு புள்ளிகளை கணிப்பிடுகையில் அசாதாரண இலாபத்தை கழிப்பதற்கு பதிலாக கூட்டியுள்ளனர்.

**பகுதி (B):**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்கவில்லை. அவ்வாறு விடையளித்திருந்தவர்களும் மிகவும் குறைந்த செயற்றினை அவதானிக்க முடிந்தது.

(2) பல பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தெரிவுக்குமான நிகழ்தவு கணிப்பீட்டை கருத்தில் கொள்ளவில்லை.

(3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்த பங்களிப்பினை மட்டும் சரியாக கணித்துள்ளனர்.

(4) பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி மீது எந்த அபிப்பிராயமும் இல்லை.

**பரீட்சகரின் பரிந்துரை:**

(1) பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தின் உதாரணங்கள் மற்றும் கடந்தகால வினாக்களை பயிற்சி செய்ய வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் அனைத்து செய்முறைகளையும் தெளிவாக வேண்டும்.

- * * * -